# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
முறையீட்டு மனு எண்.186/2019/பே
ஆணை நாள்: 30–01–2020.

லஞ்சம் வாங்காத நேர்மையான
உண்மையான
ஊழியர்கள் சங்கம்
காஞ்சிபுரம் மாவட்டம். — இம்முறைமன்ற நடுவம் தாமாக முன் வந்து முறையீடாக பதிவு செய்தது

திருமதி பிரேமா,
செயல் அலுவலர்,
திருமழிசை பேரூராட்சி.,
திருவள்ளூர் மாவட்டம். — எதிர் மனுதாரர்.

## ஆணை.

காஞ்சிபுரம் மாவட்டம், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக லஞ்சம் வாங்காத நேர்மையான உண்மையான ஊழியர்கள் என்ற முகவரியிட்டு, நாளிடப்படாத புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.07.2019 அன்று பெறப்பட்டு, மேற்படி புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவம் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் பிரிவு 7(1) ன் கீழ் தாமாக முன் வந்து முறையீடாக பதிவு செய்து, முறையீட்டு மனு எண். 186/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

மேற்படி புகார் மனுவில், காஞ்சீபுரம் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீபெரும்புதூர், திருநீர்மலை, மாங்காடு மற்றும் மாடம்பாக்கம் பேரூராட்சிகளில் செயல் அலுவலராக பணியாற்றியவரும், தற்போது திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை பேரூராட்சியின் செயல் அலுவலருமான திருமதி.பிரேமா என்பவர் மீது பல்வேறு புகார்கள் தெரிவித்து விசாரணை கோரப்பட்டுள்ளது.

17.07.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையின்படி, மேற்படி புகார் மனு தொடர்பாக பெறப்பட்ட திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரது விளக்க அறிக்கையில் புகாருக்குட்பட்ட செயல்அலுவலர் திருமதி.பிரேமா என்பவர், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியாற்றிய காலத்தில், பேரூராட்சிகளின் இயக்குநரக ஆய்வு அலுவலரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கண்டறியப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக, பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண். 658/2019/அ.1/நாள்.25.01.2019ன்படி சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் மீது தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு)விதிகளில், விதி 17(b) ன் கீழ்

குற்றச்சாட்டு குறிப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், புகார் மனுவில் தெரிவித்துள்ள பிற புகார்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டதில் அவை உண்மைக்கு புறம்பானவை எனவும், புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள கைபேசி எண்.9444189707 திருமழிசை பேரூராட்சி இளநிலை உதவியாளருடையது எனவும் தெரிவித்துள்ளார்.

18.11.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான திருமழிசை பேரூராட்சி இளநிலை உதவியாளர் திரு.பா.ஜோசப் தனது வாக்குமூலத்தில் தான் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள பொருட்கள் தொடர்பாக ஆவணங்களை பராமரிப்பதில்லை எனவும், மனுவில் குறிப்பிட்டுள்ள அலைபேசி எண் தன்னுடையது எனவும், திருமழிசை பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.ரவி என்பவர் தற்போதைய பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி பிரேமா குறித்து தன்னிடம் குறை கூறி தான் சில நாட்களில் திருமழிசை பேரூராட்சிக்கு மாற்றலாகி வந்துவிடுவேன் என கணினி உதவியாளர் திரு.முருகானந்தம் என்பவரிடம் கூறியதாகவும், திருமதி.பிரேமா மற்றும் திரு.ரவி செயல் அலுவலர்கள் ஆகியோர் குறித்து தனக்கு அதிகமாக தெரியாது எனவும், திரு ரவி செயல்அலுவலரிடம், தான் இரண்டு மாதங்கள் மட்டுமே பணிபுரிந்ததாக தெரிவித்துள்ளார்.

18.1.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான திருமழிசை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. பிரேமா தனது வாக்குமூலத்தில், தான் திருமழிசை பேரூராட்சியில் கடந்த ஆறு மாத காலமாக பணிபுரிவதாகவும், புகாரில் குறிப்பிட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுத்தும், தனக்கோ தனது உறவினருக்கோ கும்பகோணம் மற்றும் திருத்துறைப்பூண்டியில் வீடு மற்றும் நிலம் ஏதும் இல்லை எனவும், தனக்கு 2019--ஆம் ஆண்டு பதவி உயர்வு கிடைத்திருக்கவேண்டுமெனவும், தான் ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சியில் பணிபுரிந்த போது பேரூராட்சிகளின் இயக்குநரக ஆய்வு அலுவலர் ஆய்வு மேற்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். தன் மீதான புகார் மனுவில் தெரிவித்துள்ள விவரங்கள் அனைத்தையும் இதற்கு முன்னர் திருமழிசை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ரவி என்பவர் கணினி உதவியாளர் திரு.முருகானந்தம் என்பவரிடம் அப்படியே கூறியுள்ளதாகவும், அவர் மீண்டும் திருமழிசை பேரூராட்சிக்கு பணி மாறுதலில் வந்துவிடுவேன் எனத் தெரிவித்துள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

26.11.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான திருமழிசை பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரும், தற்போதைய திருவள்ளூர் மாவட்டம், ஆரணி பேரூராட்சி செயல் அலுவலருமான திரு.கே.ரவி தனது வாக்குமூலத்தில் தான் கும்மிடிபூண்டி பேரூராட்சியில் பணி புரிந்தபோது திரு.ஜோசப் என்பவரை தெரியும் எனவும், அவர் அப்போது வரித்தண்டலாக பணிபுரிந்ததாகவும், அவரை தான் சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் சந்தித்ததாகவும் தெரிவித்துள்ளார். புகாருக்குட்பட்ட திருமதி.பிரேமா காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், அவர் மீது பேரூராட்சிகளின் இயக்குநரால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி ஒழுங்கு நடவடிக்கையினை தடுக்க காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவி செயற்பொறியாளர் திரு.மனோகரன் மூலம் முயற்சி மேற்கொண்டதாகவும், அது முடியாமல் போகவே ஏற்கனவே திருமதி.பிரேமா, தன்னுடன் பணிபுரிந்த திரு.ஹென்றி என்பவர் மூலமாக தன்னிடம் மேற்படி ஒழுங்கு நடவடிக்கையினை நிறுத்தி வைக்க கேட்டுக் கொண்டதாகவும், தான் தமிழ்நாடு குடிமைப் பணி விதிகளின் கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை பிறப்பிக்கப்பட்டு விட்ட நிலையில் இது குறித்து தன்னால் ஒன்றும் செய்ய இயலாது எனவும், இது தொடர்பாக நியமிக்கப்படும் விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கையின் மூலமே மேற்படி குற்றச்சாட்டில் இருந்து விடுபட முடியும் எனவும் தான் தெரிவித்ததாக தெரிவித்துள்ளார். திருமதி.பிரேமா, கடந்த மார்ச், 2018ல் திருமழிசை பேரூராட்சியில் பணியில் சேர்ந்ததாகவும், திருமழிசை பேரூராட்சி கணினி உதவியாளர் திரு.முருகானந்தம், அவர்களிடம் தான் பணிபுரிந்த காலத்திலான கோப்புகள் தொடர்பாக திருமதி.பிரேமா கேட்டதாக தகவல் அறிந்ததால் தான் இது குறித்து திரு.முருகானந்தம் என்பவரிடம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலத்தில் வைத்து கேட்டதாகவும், அதற்கு அவர் பதில் ஏதும் தெரிவிக்கவில்லை எனவும், மேற்படி திரு.முருகானந்தம்

என்பவரை திருமதி.பிரேமா செயல் அலுவலர் பணியில் இருந்து நீக்கி விட்டதாகவும், அவரை மீண்டும் பணியில் சேர்க்க பரிந்துரைக்க திரு.ஜோசப் இளநிலை உதவியாளர் தன்னிடம் கோரியதாகவும், தற்போது மேற்படி கணினி உதவியாளர் பணியில் உள்ளதாகவும், திருமதி.பிரேமா குறித்து தன்னால் எந்த எதிர்மறையான கருத்துக்களும், செயல்களும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவரது பணிகளில் தான் குறுக்கீடு எதுவும் செய்யவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

26.11.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான திருமழிசை பேரூராட்சி கணினி உதவியாளர் திரு.ஆர்.முருகானந்தம் தனது வாக்குமூலத்தில் தான் கடந்த 15 ஆண்டுகளாக திருமழிசை பேரூராட்சியில் கணினி உதவியாளராக பணிபுரிவதாகவும், முன்னாள் செயல் அலுவலர் திரு.ரவி என்பவர் இப்பேரூராட்சியில் பணி புரிந்ததால் தனக்கு அவரைத் தெரியும் எனவும், அவர் பணி மாற்றலாகி சென்ற பின்னர் உயர் அலுவலருக்கு அறிக்கை அனுப்பும் படிவ நகலினை அனுப்பக் கோரி தொலைபேசியில் தன்னைக் கேட்டதாகவும், தான் அப்படிவத்தை அனுப்பியதாகவும், தன்னை இதுவரை யாரும் பணியில் இருந்து நீக்கம் செய்யவில்லை எனவும், திருமதி.பிரேமா செயல் அலுவலர், முன்னாள் செயல் அலுவலர் திரு.ரவி குறித்து எந்த அறிக்கையும் தயார் செய்ய தன்னிடம் சொல்லவில்லை என தெரிவித்துள்ளார். ஒரு திங்கட்கிழமை தன்னை பணிக்கு வரவேண்டாம் என செயல் அலுவலர் தெரிவித்ததாகவும், இது குறித்து தான் பணிக்கு வருவது தொடர்பாக திரு.ஜோசப் அவர்களிடம் கேட்டமைக்கு அவர் திரு.ரவி முன்னாள் செயல் அலுவலர் மற்றும் தற்போதைய செயல் அலுவலர் திருமதி.பிரேமா ஆகியோரிடம் சொல்லிவிட்ட தாக தெரிவித்துள்ளார். முன்னாள் செயல் அலுவலர் திரு.ரவி, தான் திரும்ப திருமழிசை பேரூராட்சிக்கே மாற்றலாகி வந்துவிடுவேன் என திரு.ஜோசப் மற்றும் மற்றவர்களிடம் சொன்னதாக தான் கேள்விப்பட்டதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

23.01.2020 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான காஞ்சிபுரம் மாவட்டம், திருநீர்மலை பேரூராட்சி இளநிலை உதவியாளர் திரு.கே.ஹென்றி கிறிஸ்டிராஜ் தனது வாக்குமூலத்தில், திருமதி பிரேமா, திருநீர்மலை பேரூராட்சியில் செயல் அலுவலர் கூடுதல் பொறுப்பில் இருந்த போது தனக்கு தெரியும் எனவும், தானும் திரு ரவி என்பவரும் திருவேற்காடு பேரூராட்சியில் ஒன்றாக பணிபுரிந்ததாகவும், திரு.ரவி என்பவரை கடந்த ஓராண்டிற்கு முன்னர் சந்தித்ததாகவும், திருமழிசை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி பிரேமா, தன்னை செயல் அலுவலர் திரு.ரவி அவர்களிடம் தனது பணி மாறுதல் தொடர்பாக தொலைபேசியில் கேட்க சொன்னதாகவும், அதற்கு திரு.ரவி, செயல் அலுவலர், திருமதி பிரேமா இப்பொருள் தொடர்பாக அனைவரிடமும் பேசுவார் எனவும், இது குறித்து தன்னிடம் மேற்கொண்டு பேசவேண்டாம் எனவும், திருமதி.பிரேமா மற்றும் திரு.ரவி ஆகியோருக்கிடையே பிரச்சினை உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

23.01.2020 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக உதவி செயற்பொறியாளர் திரு.பி.மனோகரன் தனது வாக்குமூலத்தில் திருமதி.பிரேமா காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல பேரூராட்சிகளில் பணிபுரிந்ததாகவும், அவர் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாகவோ, அவருக்கு பணிமாறுதல் தொடர்பாகவோ தன்னால் எந்த பரிந்துரையும் யாருக்கும் செய்யப்படவில்லை எனவும், தன் மீது இவ்வாறு தெரிவிக்கப்படும் புகார்கள் யாவும் உண்மையில்லை எனவும், தான் திருமதி பிரேமாவிற்கு எந்த உதவியும் செய்யக்கூடாது என முன்னேச்சரிக்கை நடவடிக்கையாக திரு.ரவி செயல் அலுவலர் இவ்வாறு வாக்குமூலம் அளித்திருக்கலாம் எனவும் தெரிவித்து மேற்படி செயல் அலுவலரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் பெறப்பட்ட புகார் மனு, புகார் மனுவிற்கான திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் விளக்க அறிக்கை, புகாருக்குட்பட்ட திருமழிசை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் இதர அலுவலர்களின் வாக்குமூலங்கள் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள செயல் அலுவலர் திருமதி.பிரேமா என்பவர் காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சியில் பணிபுரிந்த போது ஏற்பட்ட முறைகேடுகள் தொடர்பாக பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலக ஆய்வு அலுவலரால்

ஆய்வு மேற்கொண்டு, அதனடிப்படையில் பேரூராட்சிகளின் இயக்குநரால் தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், விதி 17(b) ன் கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை பேரூராட்சிகளின் இயக்குநரது ந.க.எண். 658/2019/அ.1/நாள்.25.01.2019 ன் மூலம் பிறப்பிக்கப்பட்டு ஏற்கனவே ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் கைவிட முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

ஃ 2020–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

பெறுநர்

1.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சிபுரம்/திருவள்ளூர்.

2.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–28

3.மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.

4.முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.

5.உதவி பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்) தகவலுக்காக.